2004 ஜூலை 27]

ஏதேனும் நிறுவனத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பிருக்கிறதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய சுய தேவைக்குப் போக, மீதமிருக்கின்ற மின்சாரத்தை third party sales, அதாவது, மற்றவர்களுக்கு விலைக்கு விற்க முடியுமா என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். புதியதாக வந்த Central Electricity Act-ன்படி அந்தக் கருத்து அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

25—

மாற்றுப்பாதை அமைத்தல்

***19854—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, அண்ணாமலையார் மலையைச் சுற்றிப் போக்குவரத்திற்கென மாற்றுப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.